முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

S.C.No. 190-2023

(LW- 7 ) PW - 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தெய்வசிகாமணி | மதம் | |
| த/பெ | நாகமுத்து | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | 29.08.24 |

(29/08/2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.( 1, 2 எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் வளவனூர் குமாரகுப்பத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அதசாஆ-3. வளவனூர் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் அதசாஆ-4. போலிசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

10/04/2012ம் தேதி பகல் 12.15 மணிக்கு கோலியனூர் கூட்டுரோடு தெற்கேயுள்ள ரயில்வே கேட்டிற்கு அருகில் வளவனூர் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் திரு.நடராஜன் அவர்கள் எதிரி சுரேஷ் என்கின்ற சுக்கு சுரேஷ் என்பவரை விசாரித்தார் என்றும் அப்போது அவர் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக நடைபெற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார் என்றும் அவரை கைது செய்து ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை ஆய்வாளர் என் முன்பும் சாட்சி ரியாஸ் என்பவர் முன்பும் பதிவு

செய்தார் என்றும் அதனடிப்படையில் எதிரியிடமிருந்து தங்க மோதிரம் ஒன்று மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக ளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை - இல்லை.</u>

x

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்